விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 07 செவ்வாய்க்கிழமை (23.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 339

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

2022 வரவு - செலவுத் திட்டம்

## 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(கொழும்பு)

**2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 93 வாக்குகள் வித்தியாசத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.**

கடந்த 12ஆம் திகதி 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட யோசனை பாராளு மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு-செலவுத்திட்ட யோசனை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நேற்று வரை யில் 7 நாட்களுக்கு

15

## மாவீரர் நாள் நினைவேந்தல்

### சாவகச்சேரி, மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்களால் விண்ணப்பங்கள் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக் கக்கோரி, பொலிஸாரினால் முன் வைக்கப்பட்ட விண்ணப்பங்களை

15

## கோவிட் பலி திடீர் அதிகரிப்பு

### மேலும் 31 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்று

15

## உணவுப் பொதி மற்றும் தேநீர் விலை அதிகரிப்பு

(கொழும்பு)


உணவுப் பொதி மற்றும் தேநீர் ஆகியவற்றின் விலை களை அதிகரிக்க சிற்றுண் டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தினால் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அதனடிப்படை

15

# அரசுடன் இணங்காவிட்டால் எப்போதும் வெளியேறலாம்

### கடும் தொனியில் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டா உத்தரவு



(கொழும்பு)

**அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு யாரும் இணங்காது போனால் எப்போது வேண்டுமானாலும் அரசாங்கத்திலிருந்து வெளி யேறலாம் என கடும் தொனியில் அதிகாரிகளுக்கு ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.**

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சேதனப்பசளைகள் பயன்படுத்துவதை மையமாகக் கொண்ட பசுமை விவசாயம் மட்டுமே நாட்டின் விவசாயக் கொள்கை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தி

15

## ஜனாதிபதி செயலணி

### கிளிநொச்சிக்கு விஜயம்

(கிளிநொச்சி)

"ஒரே நாடு - ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணி மக்கள் அபிப்பிராயங்களை அறிவதற்கு நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண

15

கொரோனாவால்

## சாவகச்சேரியில் பெண் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் கொரோனா நோயா ளர் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த 52 வயதான பெண் ஒரு வர் நேற்று திங்கட்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

இவரது சடலம் சுகா

15

## பனையால் தவறிவிழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

உடுப்பிட்டியில் சம்பவம்

(கரணவாய்)

பனையால் தவறிவிழுந்த சீவல் தொழிலாளி ஒருவர் பரி தாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் இமையா ணன் கிழக்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த நடராசா ஜெயராசா (வயது-48) என்பவரே உயிரி ழந்தவராவார்.

நேற்று முன்தினம்

15

## கொரோனா +735

(கொழும்பு)

நாட்டில்மேலும்735 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்

15

## அனைவரும் வீடுகளில் ஏதாவது ஒன்றை பயிரிடுங்கள்

### இலங்கையின் நிலைமை படுமோசம் தயாசிறி ஜயசேகர எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை தற்போது பயங்கர மான நிலைமைக்கு வந்துள்ள தாகவும் அனைவரும் தமது வீடு களில் சாப்பிடத் தேவையான ஏதா வது ஒன்றை பயிரிட்டுக் கொள் வது நல்லது என்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்

15

## ஒரு நாடு ஒரு சட்டம் செயலணி சமூகத்தை புறக்கணித்துள்ளது

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

ஒரு நாடு - ஒரு சட்டத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்து ஆட் சிக்கு வந்த அரசாங்கம் புதிய செய லணி அமைத்து ஒரு சமூகத்தை முற்றாக புறக்கணித்திருக்கின் றது.

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு நாடு முன்னுக்கு செல்ல முடியாது.

அத்துடன் உயிர்த்த

15

சுதந்திரம் பெற்ற பின்னர்

## இலங்கை எதிர்கொள்ளும் மோசமான நெருக்கடி

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

1948ஆம்ஆண்டுசுதந்திரம்பெற்ற பின்னர் இலங்கை தற் போது மிக மோசமான

15

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மரண அறிவித்தல்

## இராசதுரை துரைராசா

( முன்னாள் ஹலோ ரஸ்ற் பணியாளர் )



**மண் மகிழ : 1964.01.20**
**மண் நெகிழ : 2021.11.21**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.78, எட்டாம் வாய்க்காலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை துரைராசா அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை (C.T.B சாரதி)- பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சசிகலாவின் பாசமிகு கணவரும் பிரியா, கஜன் (அவுஸ்திரேலியா), அஜந்தினி (ஆசிரியை - பாகற்குளம் அரசினர் மகா வித்தியாலயம், வவுனியா), சாலுஜா (பிரான்ஸ்), சரண்ஜா (உயர்தர மாணவி - கிளி/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவி, ஜீவன் (வவுனியா), தீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அபினா, அனுசாந், அபிஷன், அத்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் பத்மா, பிறேமா, கிளி, தவம் (முறிகண்டி பிள்ளையார் ஹாட்வெயார் - கிளிநொச்சி), விஜயா, காலஞ்சென்ற மோகன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ராசன் (முன்னாள் குமரன் புடைவையக உரிமையாளர் - கிளிநொச்சி), பாஸ்கரலிங்கம் (பாடசாலைப் பணியாளர் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி), செல்லா, அனுஷா, ரவி (குமரன் ஹாட்வெயார் - மல்லாவி), கம்ஷா, சசிகரன் (தம்பிகடை, D8 உருத்திரபுரம்), கண்ணன் (சாரதி - இரத்தினபுரம், கிளிநொச்சி), சந்திரி (லண்டன்), வவா (இலண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மாலா, மிதுலா, சுரேஸ், விக்னேஸ்வரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(23.11.2021)* செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(8736)

இல. 78, எட்டாம் வாய்க்கால்,
உருத்திரபுரம்.

தகவல் :-
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 2021.10.24 ஆம் திகதி இறைபதம் அடைந்த

## அமரர் சுந்தரமணி சந்திரகாந்தி

(வல்வெட்டித்துறை)


அவர்களின் அந்தியேட்டி நிகழ்வானது 2ஆம் வட்டாரம் கோம்பாவில் புதுக் குடியிருப்பில் அமைந்துள்ள அன்னாரின் மகனான சுந்தரமணி மோகனராஜன் அவர்களின் இல்லத்தில் நாளை (24.11.2021) புதன்கிழமை நடைபெற இருப் பதனால் அன்றையதினம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

(C-3070)

உஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

தகவல்
சு. மோகனராஜன் (மகன்)
பிள்ளைகள்

# நீங்கா நினைவில் இருபத்தாறு ஆண்டுகள்





தோற்றம்
03.11.1941

மறைவு
23.11.1995

தோற்றம்
18.08.1983

அமரர்
## கனகசபை சண்முகசுந்தரம்
(சோமு)

அமரர்
## சண்முகசுந்தரம் சிவரூபன்
(டியூக்கோ)

இருவரும் இங்கிருந்து இறையுலகு சென்று
இருபத்தாறு ஆண்டுகள் ஆறாய் ஓடிடினும்
உருக்கமுடன் உங்களை எங்கள் மனதிலிருந்து
பெருமானை வழிபட்டு பெறுகின்றோம் ஆறுதலை

"துர்க்கா இல்லம்" இல. 29, ஒட்டுமடம் வீதி,
ஒட்டுமடம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(C-3071)


குடும்பத்தினர்

# மாவீரர் நினைவேந்தல் என்பது தமிழினத்தின் உயிரோடும் உணர்வோடும் கலந்தது

## எம் பிரதேசத்தில் திட்டமிட்டு போதையை பரப்பியது யார்?

### ஞானசார தேரரிடம் சிறீதரன் எம்.பி.கேள்வி

(கிளிநொச்சி)



**நீதிமன்றத்தை மதிக்கத் தெரியாது, இந்த நாட்டின் நீதித்துறையையே அவமதித்த மிலேச்சத்தனமான இனவாதியான ஞானசார தேரர், போதைப்பொருள் ஒழிப்புக் குறித்துப் பேசுவது நகைப்புக்கிடமானதாகவே உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் கலகொட ஞானசார தேரரின் கருத்திற்கு பதிலளிக்கும் முகமாக நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

விளக்கேற்றக் கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள் போதைப்பொருளைத் தடுப்பதற்கு தயாராக இல்லை எனவும், பாராளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள்? என்றும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஞானசார தேரர் தெரிவித்துள்ள கருத்து மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாக அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு, கிழக்கில் 2009 ஆம் ஆண்டு வரை போதைப்பொருள், கஞ்சா, ஹெரோயின் என்ற சொற்பதங்களையே அறியாதவர்களாகத்தான் தமிழ் இளைஞர்கள் இருந்தார்கள். அந்தளவுக்கு தனிமனித ஒழுக்கத்திற்கு விடுதலைப்புலிகள் முக்கியத்துவம் கொடுத்தார்கள். அத்தகைய கட்டமைக்கப்பட்ட ஒழுக்க விதிகளுக்கு உட்பட்டு வாழ்ந்த தமிழ் இளைஞர்களை திட்டமிட்டு திசைதிருப்பும் நோக்கோடு, இன அழிப்பின் இன்னோர் வடிவமாக, அவர்களை போதைக்கு அடிமையாக்கி இனத்தைச் சீரழிக்கும் கைங்கரியத்தை திட்டமிட்ட வகையில் கையாளும் ஞானசார தேரர் போன்றோர் போதைப்பொருள் தடுப்புக் குறித்து பேசுவதும், அதனோடு மாவீரர்களை நினைவேந்துவதை ஒப்பு நோக்குவதும் பொருந்தாத செயலாகும்.

மாவீரர்களை நினைவேந்துவது தமிழர்களின் உயிர்ப்போடும், உணர்வோடும், கலாசார மரபியல்புகளோடும் இரண்டறக் கலந்த நிகழ்வு. அந்த நினைவேந்தலுக்கான உரிமை மறுக்கப்படுகிறபோது அதற்கெதிராய் குரல் கொடுப்பதென்பது தன்னியல்பு. எமது உரிமைக் கோரிக்கைக்கு செவிசாய்க்கவே தயாராயில்லாத, எந்நேரமும் இனவாதத்தைக் கக்கும் ஞானசார தேரரின் இத்தகைய கருத்து, தமிழர்களின் உணர்வுகளை சீண்டிப்பார்ப்பதாகவே அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் இருந்த தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை இடித்தழித்து விட்டு, தமிழர்களின் பூர்வீக நிலங்களான வெடுக்குநாறி மலையிலும், குருந்தூர் மலையிலும், உருத்திரபுரீஸ்வரத்திலும் பௌத்த சிங்கள அடையாளங்களை நிறுவுவதற்காக கங்கணம் கட்டி நிற்கும் ஞானசேர தேரரை "ஒரே நாடு ஒரே சட்டம்" செயலணியின் தலைவராக நியமித்தமை இந்த நாட்டிற்கே அவமானம். அந்த நியமனமே இலங்கை அரசின் இனவாத முகத்தை எண்பிப்பதற்கு போதுமான சாட்சியம் ஆகும். நாட்டின் நீதித்துறைக்கு கட்டுப்பட்டு நடக்கத் தெரியாத ஞானசார தேரருக்கு மாவீரர்களை நினைவேந்துவது குறித்தோ, தமிழ் அரசியல்வாதிகள் குறித்தோ கருத்துரைப்பதற்கு எந்த அருகதையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## ஐ.நாவின் பிரதிநிதி இலங்கை விஜயம்



(கொழும்பு)

ஐ.நாவின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் பகுதிகளுக்கான உதவி பொதுச் செயலாளர் நாயகம் மொஹமட் காலித் கியாரி இன்று இலங்கைக்கு தனது முதல் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை வரும் காலித் கியாரி, சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள், அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், மதத் தலைவர்கள் மற்றும் இராஜதந்திர சமூகத்தின் பிரதிநிதிகளை சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## கனடாவில் சுமந்திரனுக்கு புலம்பெயர் தமிழர்கள் எதிர்ப்பு

### பொலிஸ் பாதுகாப்புடன் வெளியேறினார்

(ரொரன்ரோ)

கனடாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பங்கேற்ற கூட்டத்தில் புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் இன உணர்வாளர்கள் திடீரென சுமந்திரனுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டதால் மண்டபத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

இதையடுத்து நிகழ்வு இடைநிறுத்தப்பட்டு, பொலிஸ் பாதுகாப்புடன் சுமந்திரன் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்.

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் அங்கிருந்து கனடாவுக்கு சென்றிருந்தனர்.

கனடா சென்ற இவர்கள், கனடா தமிழரசுக் கட்சிக் கிளை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கிளை, கனேடியத் தமிழ்க் காங்கிரசு ஆகியன இணைந்து ஒழுங்கமைத்திருந்த நிகழ்வில் மேற்படி அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனர்.

இந்நிலையில், கலந்துரையாடல் நடக்கும் மண்டபத்துக்கு வெளியே திரண்ட புலம்பெயர் தமிழர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததுடன் கோசங்களையும் எழுப்பினர். இதனால் அங்கு



பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் அங்கு விரைந்து சென்ற கனேடிய பொலிஸார் சுமந்திரனையும் சாணக்கியனையும் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு எதிராகப் புலம்பெயர் தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தால், குறித்த கலந்துரையாடல்கள் இரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மீண்டும் மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

நாட்டிற்கு அண்மையாக கீழ் வளிமண்டலத்தில் விருத்தியடையும் தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் மழை பெய்வதற்கான வாய்ப்பு இன்றில் இருந்து அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொது மக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (நி-5)


## சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர் கானமயில்நாதன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர் வ.கானமயில்நாதன் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 79.

பத்திரிகைத் துறையில் மிக நீண்ட காலம் பணியாற்றிய கானமயில்நாதன் அவர்கள் ஈழநாடு, தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, உதயன், காலைக்கதிர் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியிருந்தார்.

உதவி ஆசிரியர், செய்தி ஆசிரியர், பிரதம ஆசிரியர் எனப் பத்திரிகைத் துறையில் பல்பரிமாணங்களில் பணியாற்றி, தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஆளுமைமிக்கவராக விளங்கிய கானமயில்நாதன் அவர்களின் இறுதிக்



கிரியைகள் இன்று முற்பகல் 10 மணியளவில் நல்லூர் செட்டித்தெருவில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். (ம-3)

## நிதியமைச்சர் விரைவில் டில்லி பயணம்

(கொழும்பு)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொளள்வுள்ளார்.

புதுடில்லிக்கு விஜயம் செய்யும் பசில் ராஜபக்ஷ அங்கு பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (நி-5)

# தேசிய மட்ட கபடிப் போட்டி

- யாழ்.அணி வெள்ளிப் பதக்கம்
- கிளிநொச்சி அணி வெண்கலப் பதக்கம்



யாழ் அணி



கிளிநொச்சி அணி

தேசிய மட்ட கபடிப் போட்டியில் யாழ்.மாவட்ட இளைஞர் பெண்கள் அணி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

33 ஆவது தேசிய மட்ட இளைஞர் மாவட்ட அணிகளுக்கிடையிலான பெண்களுக்கான இறுதியாட்டம் கடந்த 20 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பொது விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து கேகாலை மாவட்ட இளைஞர் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதிவரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடினர்.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் 24:31 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் யாழ். மாவட்ட இளைஞர் அணி தோல்வியடைந்து சம்பியன் வாய்ப்பைத் தவறவிட்டது.

தொடர்ந்து 3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட இளைஞர் அணி மோதியது.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர்.

இருப் பினும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் பெண்கள் அணி ஆட்ட நேர முடிவில் 35:28 என்ற புள்ளிகள் வித்தியாச த்தில் வெற்றி பெற்று வெண் கலப் பதக்கத்தை கைப்பற்றியது. (4-90)

## ஜப்னா கிங்ஸ் அணியின்

## பயிற்றுவிப்பு ஆலோசகராக ஹேமன் பதானி நியமனம்



2021 ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் தொடருக்கான Jaffna Kings அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகராக இந்தியா அணியின் வீரரும், தகுதிவாய்ந்த இரண்டாம் நிலை பயிற்றுவிப்பாளருமான ஹேமன் பதானி நியமிக்கப்பட்டுள்ளார்.

திறமையான நடுநிலை துடுப்பாட்ட வீரரான ஹேமன் பதானி 2010 ஆம் ஆண்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடன் IPL ஒப்பந்தம் செய்து கொண்ட சிறந்த களத்தடுப்பு வீரருமாவார்.

தனது 23 ஆவது வயதில் இந்திய ஒருநாள் அணியுடன் இணைந்து கொண்ட அவர், அஜே ஜடேஜாவின் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு பொருத்தமான வீரர் என இனங் காணப்பட்டார்.

ஆட்டமிழக்காது களத்தில் துடுப்பெடுத்தாடும் திறமையான வீரரான பதானி 40 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும், 100 இற்கும் மேற்பட்ட முதல்தர போட்டிகளிலும் ஆடியுள்ள திறமையான வீரருமாவார். அவர் அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக பூனே மைதானத்தில் பெற்றுக் கொண்ட வேகமான சதமே அவரது அதிக கூடிய ஓட்டமாக பதியப்பட்டுள்ளது. (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2455

### அபிஷேக்

சிகரெட் பிடிக்கிறவங்க பல பேருக்கு முடி நரைக்கிறதே இல்லை
அப்படியா ஆச்சரியமா இருக்குதே எப்படி?




நரைக்குற வயசு வரை அவங்கள் நிறைய பேரு இருக்கிறது இல்லை

### மதுமிதா

மகன் : அப்பா நீங்க எல்லாம் அந்தக்காலத்துல 4G, 5G இல்லாம எப்படித்தான் வாழ்ந்தீங்களோ?

அப்பா : MY SON நாங்க எல்லாம் வளர்ந்த கலாத்துல ஒரு மூனு ஜி இருப்பாங்க மாதஜி, பிதாஜி, குருஜி ஒரு அறை விட்டாங்கன்னா எங்களுக்கு எல்லா நெட்வொர்க்கும் ஆட்டோமேடிக்கா ஓப்பன் ஆகிடும்


### சிபி

ஏங்க கீழடி எங்கங்க இருக்கு?
நம்ம வீட்டு பீரிஜ் க்குள்ளத்தான்... அங்கத்தான் பண்டைய காலத்து சாம்பார், காரக் கொழம்பெல்லாம் இருக்குது....
யோவ் ஓடாத நில்லுய்யா



### ஐக்கி

ஏன்டா நேத்து டல்லாயிருந்தே?
நேற்று புடவை வாங்கறேன்னு போய் 20 ஆயிரம் ருபாய்க்கு என் தர்மபத்தினி வாங்கிட்டு வந்தா..
சரி இன்னிக்கு ஏன் சந்தோஷமா இருக்கே?



அவ புடவையை உன் பொண்டாட்டிக்கு காமிக்க போயிருக்கா

### வருண்

எங்க தாத்தா சாகுறதுக்கு முன்னாடி எப்படி இருந்தாங்க தெரியுமா?



எப்படி இருந்தாரு?.... உயிரோடு இருந்தாரு....



அடிங் கொய்யால... உன்ன இன்னைக்கு கொல்லாம விடமாட்டேன்டா

### சுருதி



அழாதமா செல்லம்



அப்பாவியா இருக்கியே தம்பி, ஆறு மாசம் தான், அப்புறம் daily நீதான் அழுவ... என்ன உன் கண்ணீர் தொடைக்கத்தான் ஆள் இருக்காது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Visit: www.abansgroup.com

BLACK FRIDAY SALE

நவம்பர் 26 முதல் 28 வரை

56% வரை தள்ளுபடி

48 வரை மாதங்கள் வரை வட்டி இல்லை.

*நிபந்தனைகளுக்குட்பட்டது

நாடளாவிய அபான்ஸ் கிளைகள் மற்றும் BUYABANS மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

HNB Credit cards, SampathCards, Nations TrustBank, COMMERCIAL BANK, HSBC, BOC, PEOPLE'S BANK, standard chartered, SEYLAN BANK LIMITED, DFCC BANK, LOLC FINANCE, PAN ASIA BANK

BUY ONLINE Abans.com

0115 999 000

(C-1535)

Abans

# இராசிபலன்

**23.11.2021**
கார்த்திகை 07, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 10.35 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 12.28 மணிவரை
சுபநேரம் 10.41-12.11 மணிவரை
இராகு காலம் 3.11-4.41 மணிவரை
சந்திராஷ்டமம்- கேட்டை, மூலம்
கங்கடகர சதுர்த்தி விரதம்
சாயி பாபா பிறந்த தினம்

வளவன்


மேஷம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.


ரிஷபம்

தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


மிதுனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.


கடகம்

அற்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.


சிம்மம்

உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.


கன்னி

திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்துக்கு வழியமைப்பீர்கள், தூரத்து உறவினர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


துலாம்

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


விருச்சிகம்

குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


தனுசு

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மகரம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


கும்பம்

பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, இனிமையான நாள்.


மீனம்

மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், வாகன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கெடுதல் வரும்போது தெரியும் நண்பரின் அடையாளம்.**

# முதலீட்டாளர்கள் முறைப்பாடுகளை வழங்க வட்ஸ்அப் இலக்கத்தை வழங்கிய ஆளுநர்

(அராலி)

வடக்கில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எதிர்நோக்குகின்ற நிர்வாக ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் தனக்கு முறைப்பாடுகளை வழங்க வட்ஸ்அப் இலக்கத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு இலக்கத்தை வழங்கினார்.

குறித்த நிகழ்வில் பங்குபற்றிய முதலீட்டாளர்கள் தமது குறைகளை நிவர்த்தி செய்து முன்னோக்கிச் செல்வதற்கு வடக்கில் உள்ள அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் போதாது என்ற குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அதுமட்டுமல்லாது யாழ்ப்பாண வணிகர் சங்கமும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்ததுடன் வடக்கிலுள்ள வளங்களை பயன்படுத்துவதற்கு இங்குள்ள முதலீட்டாளர்கள் தயாராக இருக்கின்ற நிலையில் அதனைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். இதன்போது பதிலளித்த வடமாகாண ஆளுநர் அவர்களின் கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு தான் தயாராக இருப்பதாகவும் அது தொடர்பில் தனது வட்ஸ்அப் இலக்கத்திற்கு முறைப்பாடுகளை வழங்க முடியும் என கூறி இலக்கத்தை வழங்கினார்.(4-5-104)

# தனியார் பேருந்து நடத்துநர் மீது தாக்குதல்

(குப்பிழான்)

காரைநகர் பயணிகள் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்து ஒன்று சங்கானையில் வழிமறிக்கப்பட்டு நடத்துநர் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற தாக்குதலில் நடத்துநர் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டார். இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(4-5-18-33)

# உயர் பண்பு மிக்க பத்திராதிபரை எம் மண் இழந்து விட்டது

## செஞ்சொற் செல்வர் இரங்கல்

(யாழ்ப்பரணம்)

மூத்த பத்திரிகையாளர் கானமயில்நாதனின் பிரிவுச் செய்தியறிந்து மிகுந்த கவலையடைகின்றேன்.

பல்துறை ஆற்றல் மிக்க பத்திராதிபரை எம் மண் இழந்து விட்டது என செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமய விடயங்கள் முதல் அரசியல் வரை ஆராய்ந்து செய்தி வழங்கிய பத்திரிகையாளன். எவருக்கும் அஞ்சாது தனது கருத்துக்களை வெளிப்படுத்தி.வந்தவர்.

போர்ச்சூழலில் ஆபத்தான கட்டங்களில் கூட மக்களுக்கு துணிந்து செய்தி சொன்ன மகத்தான மனிதன். இன்றைய இளம் பத்திரிகையாளர் பலருக்கு குருவாக விளங்கி ஆற்றுப்படுத்தியவர். மும்மொழிப் புலமைமிக்க பத்திராதிபர்.

ஈழத்து பத்திரிகை வரலாற்றில் இவரது நாமம் நிலைபெறும் என தெரிவித்தார்.(4-5)

# மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை நடமாடும் சேவை நாவாந்துறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் வட்டாரம் 01, 18, 19, 20 மற்றும் 21 ஆம் வட்டாரங்களிற்கான பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள சோலை வரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு சோலைவரி, தண்ணீர் வரி போன்றவற்றை செலுத்துமாறு யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (4-5)

# நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலாளரான அமரர். வே.தி.செல்வரட்ணத்தின் நினைவஞ்சலி நிகழ்வு நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் யாழ்ப்பாணக்கல்வி வலயத்தில் அமரருடன் இணைந்து பணியாற்றினோரினால் கொவிட்-19 சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கமைய நடைபெறவுள்ளது. (4-5)

# திருட்டில் ஈடுபட்ட இருவர் யாழ்.பொலிஸாரிடம் சிக்கினர்

## பணம், நகைகளும் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வீடு உடைத்து திருட்டில் ஈடுபட்ட இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருப் பகுதியில் வீடு உடைக்கப்பட்டு ஆறு பவுண் நகையும், ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களால் முறையிடப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஆறரைப் பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-18-33-104)

# அடிப்படை வசதிகளை தராவிட்டாலும் மருத்துவ வசதியை பெற்றுத் தாருங்கள்

## இரணைதீவு மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

**கிளிநொச்சி இரணைதீவு பகுதி மக்களின் மருத்துவத் தேவைகளுக்கு ஏற்றவகையில் நோயாளர்களுக்கான படகுச் சேவை ஒன்றினை ஒழுங்குபடுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட இரணைதீவுப் பகுதியில் மக்கள் மீள்குடியேறியதையடுத்து குறித்த பிரதேச மக்களின் மருத்துவத் தேவை நிவர்த்தி செய்யப்படுவதில் காலதாமதங்கள் காணப்படுகின்றன.

இரணைதீவிலிருந்து நோயாளிகளைக் கொண்டு செல்வதற்கு ஏற்றவகையில் நோயாளர்களுக்கான படகுச்சேவையை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படாவிட்டாலும் மருத்துவ வசதி என்பது மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுவதனால் மருத்துவ வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

# பொருளாதார நெருக்கடிக்கு ஆட்சிசெய்த அனைவருமே பொறுப்பு

## கம்மன்பில சுட்டிக்காட்டு

(கொழும்பு)

"நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசோ அல்லது கொவிட் தொற்றோ காரணமில்லை. 1955 ஆம் ஆண்டிலிருந்து நாட்டை ஆட்சி செய்துவந்த அனைத்துக் கட்சிகளுமே இந்தப் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பு" என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"நாடு பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. நாட்டில் பணம் இல்லை. டொலர் இல்லை என்பதை நாங்கள் வெளிப்படையாகத் தெரிவித்து வருகிறோம்.

2019 இல் எமது பொருளாதார அபிவிருத்தி வேகம் 2 வீதத்துக்குக் குறைந்துள்ளது.

கடன் வீதம் 87வீதத்தால் அதிகரித்துள்ளது. அதுதான் பொருளாதார வீழ்ச்சிக்கான அடையாளம். இந்தப் பிரச்சினை எப்போதாவது வெடிக்கவே இருந்தது. எனினும், கொவிட் காரணமாக விரைவாக வெடித்திருக்கிறது.

நாட்டில் இவ்வாறு தேசிய பிரச்சினை இருக்கும்போது நாங்கள் அதற்கு இணைந்து முகம்கொடுக்கவேண்டும்.

ஆனால், நாங்கள் கட்சி, இன, மத ரீதியாகப் பிரிந்து இருப்பது மாத்திரமல்லாது கொவிட் பிரச்சினைக்கு முகம்கொடுத்து நாட்டைப் பாதுகாப்பது அனைத்து கட்சிகள், இனத்தவர்களின் பொறுப்பு என கம்மன்பில தெரிவித்தார். (நி-5)

# நாடு முழுவதும் ஆயுதம் தாங்கிய படையினர்

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டார்.

நேற்று திங்கட்கிழமை முதல் அமுலாகும் வகையில் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 தாக்குதலைத் தொடர்ந்து, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆயுதம் தாங்கிய படையினரை அமைதியை பேண அழைப்பு விடுத்து விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.

ஒரு மாத காலத்துக்கு அமுலாகும் வகையில் ஒவ்வொரு மாதமும் 22 ஆம் திகதி இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார்மயப்படுத்தப்படாது

## எரிசக்தி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தான் அமைச்சராக இருக்கும் வரை தனியார்மயப்படுத்தப்படமாட்டாது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

அந்நியச் செலாவணியை முகாமைத்துவம் செய்யும்போது கச்சாய் எண்ணெயை இறக்குமதி செய்து சுத்திகரிப்பதைவிட சுத்திகரிப்பு செய்த எரிபொருளை இறக்குமதி செய்வது இலாபகரமானது எனவும் அவர் தெரிவித்தார். டொலர் பிரச்சினை ஏற்பட்டால் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை மூட நேரிடும் என அண்மையில் கூறியதையும் சுட்டிக்காட்டினார். (நி-5)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகில் 24.02.1952 | வானுலகில் 29.11.2015

## திருமதி. தர்மலக்ஷ்மி சூரியகுமார்

அன்பின் திருவுருவே பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே பத்துமாதம்
சுமந்து பாரினிலே சீருடன் வாழ
வழிகாட்டிய அன்னையே
எம்மையெல்லாம் ஆறாத்
துயரினில் ஆழ்த்திவிட்டு சாயீசன் பதமடைந்து
ஆண்டு ஆறு ஆனதுவோ அம்மா
நம்ப முடியவில்லையே அம்மா

நீங்கள் பாடும் பஜனைப் பாடல்கள்
எமது செவிகளில் ரீங்காரமிட்டுக்
கொண்டேயிருக்கின்றன அம்மா
ஆண்டு ஆறு என்ன
எத்தனை எத்தனை ஆண்டுகளானாலும்
எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும்
எம் அன்னைக்கு எம் இதய அஞ்சலியை செலுத்தி
என்றும் உங்கள் நினைவுடனேயிருக்கும்

**ந.சூரியகுமார் (கணவர்)**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

**இல. 72, அச்சுக்கூட வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

(8677)

# 31 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 10 1927 | இறப்பு 23 11 1990

## அமரர். சண்முகம் ஞானப்பிரகாசம்

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகரும் இணைப்பதிகாரியுமாகிய ஓய்வுபெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் **அமரர்.சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்களின் சேவையினை நன்றியுடன் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தலைவர்,**
**பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்,**
**சமூக அபிவிருத்தி மன்றம்.**

**276, அரசடி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

[8701]

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார தினம் இன்று

**தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும்பொழுது தர்மத்தை நிலை நாட்டவும் நல்லவர்களைப் பாதுகாக்கவும் தீயவர்களை ஒழிக்கவும் அல்லது மாற்றவும் நான் யுகம்தோறும் மனிதனாய் அவதரிக்கிறேன் என்று பகவான் பகவத் கீதையில் பிரகடனம் செய்துள்ளார்.**

**இக் கலியுகத்தில் தர்மம் மோசமாகக் குன்றியபடியால் பகவான் அடுத்தடுத்து மூன்று தடவைகள் அவதாரம் எடுக்க வேண்டியுள்ளது என்று பகவான் சத்திய சாயி பாபா கூறியுள்ளார்.**

முதலாவது அவதாரம் ஷீர்டி சாயி பாபா (1838 – 1918) முடிவடைந்து இரண்டாவது அவதாரமும் (1926 – 2011) முடிவடைந்துவிட்டது. மூன்றாவது அவதாரம் பிரேம சாயி தற்போது நிகழ்ந்திருக்கவேண்டும். ஆனால் அவர் இன்னும் பிரகடனப்படுத்தவில்லை.

**சத்திய சாயி பாபாவின் அவதாரத்தின் தனித்துவமும் உபதேசங்களும்**

•இப்போது ஒவ்வொரு மனிதனிலும் அதர்மம் ஓங்கியிருப்பதால் மனிதர்களை அழிப்பதைவிட உன்னதமானவர்களாக மாற்றுவதே நோக்கமாகும்.

•மனிதன் உன்னதமானவனாக மாறினால் உலகம் தானாகவே உன்னத மாற்றமடையும்.

•சத்திய சாயி பாபா சர்வ தர்மப்பிரியர் ஆவார். சகல மதங்களும் உன்னதமானவையும் கடவுளை நோக்கிச் செல்லும் பாதைகளேயாவதில் மத மாற்றத்திலும் பார்க்க மனமாற்றமே தேவையெனக் கூறியுள்ளார். ஒவ்வொருவரும் அவரவர் மதங்கள் மூலமாக உன்னத நிலையை அடைய வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

•ஆன்மிக சாதனைகளுடன் சமூக சேவையும் இணையவேண்டும். பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட சேவை செய்யும் கரங்களே மேன்மையானவை என்று தனது வாழ்நாளிலே சத்திய சாயி நிறுவனத்தை ஸ்தாபித்து ஆன்மிகம், சேவை, கல்வி என்ற மூன்று பிரிவுகள்மூலம் தீவிரமாகச் செயற்பட வழிகாட்டியுள்ளார்.

•உலகத்தை நீண்டகாலம் உன்னதமாக நிலைத்திருப்பதற்கு ஆன்மிகம் (மனித விழுமியங்கள்) இணைந்த கல்விமுறையை அறிமுகப்படுத்தியுள்ளார். சிறுவர் பள்ளி முதல் பட்டப்பின் படிப்புவரை எவ்வாறு ஆன்மிகத்தையும் உலகவியலையும் இணைக்கலாம் என்று செய்து காட்டியுள்ளார். இக் கல்விமுறை இப்போது கல்வியியலாளர்களின் அங்கீகாரத்தைப் பெற்று உன்னதமான மாணவர்களை உண்டாக்கி சகலதுறைகளிலும் மனித விழுமியங்களை மையமாக வைத்து வாழலாம் என்றும் காட்டியுள்ளார். இக் கல்விமுறையில் அறிவுத்திறன், செயற்திறன் ஆகியவற்றுடன் மனித உன்னதத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இம்முறையில் ஆசிரியரை மையப்படுத்தி முன்மாதிரியாக வாழ்ந்து கற்பிப்பதையே வலியுறுத்தப்பட்டுள்ளது.

•மனிதனின் அடிப்படைத் தேவைகளுடன் இலவசக் கல்வி இலவச வைத்தியம், இலவசக் குடிநீர் ஆகியவற்றிற்கு முக்கியம் கொடுத்துள்ளார். இவையனைத்தும் பாரிய அளவில் இயங்குகின்றன.

•தெய்வீகத் தன்மையில் மனிதனின் நம்பிக்கையைத் தீவிரப்படுத்த தெய்வீக வெளிப்பாடுகளை உபயோகித்துள்ளார். உதாரணமாக, அற்புதங்கள், ஒரு நேரத்தில் பல இடங்களில் தோன்றுதல், ஒவ்வொருவரினதும் முக்காலத்தையும் அறிந்திருத்தல், சகல வல்லமை உள்ளதையும் வெளிக்காட்டியுள்ளார்.

•வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்களிலுள்ள உட்கருத்தை மிகவும் தெளிவாக எளிய நடையில் நூல்கள்மூலமும் அருளுரைகள் மூலமும் வாழ்ந்து காட்டுவதன் மூலமும் அருளியுள்ளார்.


பகவான் பௌதீக உடலைவிட்டு மகா சமாதியடைந்தாலும் அவரின் நாமம், ரூபம், வாழ்வு, போதனைகள், தெய்வீக வெளிப்பாடுகள்மூலம் அவர் எங்கும் வியாபித்து வழிகாட்டிக் கொண்டேயிருக்கிறார்.

அவரின் போதனைகளும் ஏனைய மதங்களின் கூற்றுக்களுடன் எவ்வாறு ஒருங்கிணைந்துள்ளன என்று அறிந்து கொள்ளலாம்.

•நான், எனது என்ற மனப்பாங்கிலிருந்து நாங்கள் எங்களினது என்ற நிலைக்கு மாறி எல்லாம் அவனே என்ற நிலைக்கு உயரவேண்டும். இதையடைய,

"அனைவரையும் நேசி
அனைவருக்கும் சேவை செய்"
"எப்போதும் உதவி செய்
ஒருபோதும் தீங்கு செய்யாதே"
என்பதை உள்வாங்கிச் செயற்படுத்த வேண்டும் - சத்திய சாயி பாபா.

•உடலெடுத்ததும் துன்பம் உண்டாகிறது. இதற்கு உலகப்பற்றே காரணம். பற்றை முழுமையாக எட்டுக் கோட்பாடுகள்மூலம் நீக்கினால் நிர்வாண நிலை அடையலாம். – புத்தர் பெருமான்



• அயலவனையும் உன்னைப்போல் நேசி. பரலோகத்தில் நாட்டங் கொண்டு கேட்டு, தட்டி தேடியடையவேண்டும். பரலோகத்தைக் கேட்டால் தேவையான மிகுதியெல்லாம் கொடுக்கப்படும்.
- இயேசு பிரான்

• எல்லாம் அல்லாவே. அவரைவிட மேலானவர் ஒருவரும் இல்லை. அவர் மிகவும் கருணையானவர். வல்லமையானவருமாவார். அவரையே தொடர்ச்சியாக நினைத்துக் கொள்ளவும்.
— முகம்மது நபி பெருமானார்.

தெய்வீக மனப்பாங்கில் வாழ்ந்து தெய்வீக நிலையை அடைவோமாக.

வைத்திய கலாநிதி
இ. கணேசமூர்த்தி
யாழ்ப்பாணம்.

## வவுனியாவின்
# மேலதிக அரச அதிபருக்கு கொரோனாத் தொற்று

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

நேற்று முன்னெடுத்த துரித அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவருடன் தொடர்புடையவர்களையும் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-5-250)

## சேறும் சகதியுமாகக் காணப்படும்
# யாழ். சரவணை வீதி
## விரைந்து புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சரவணை பகுதியில் வீதி சகதியாக காணப்படுவதனால் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

சரவணை - ஊர்காவற்றுறை வீதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வரும் வேளையில், புனரமைப்புப் பணிக்காக வீதியில் போடப்பட்ட மண், மழை காரணமாக சகதியாக மாறியுள்ளது.

இதனால் அப்பகுதியில் பயணிப்பவர்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட நடந்து செல்வோர் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதேவேளை வீதியில் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்பவர்களும், சகதிக்குள் சிக்கி விபத்துக்குள்ளாகின்றனர்.

எனவே புனரமைப்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-33)

# சூடான் பிரதமரிடம் மீண்டும் ஆட்சியை ஒப்படைக்க இராணுவம் சம்மதம்

(கார்டூம்)

சூடானில் பிரதமர் அப்துல்லா ஹாம்டோகிடம் ஆட்சியை மீண்டும் ஒப்படைக்க, இராணுவம் சம்மதம் தெரிவித்தது.

ஐ.நா. அமைப்பும் அமெரிக்காவும் முக்கிய பங்கு வகித்த இராணுவத்துக்கும் அரசியல் தலைவர்களுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைக்கு பிறகு இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரையும் விடுவிக்கவும் இராணுவம் சம்மதித்தது.

மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, சுதந்திரமான ஓர் அமைச்சரவைக்கு ஹாம்டோக் தலைமை வகிப்பார்.

ஆட்சியில் தனது பிடியை இறுக்கும் வகையில் புதிய இறையாண்மை சபையை இராணுவம் அமைத்துள்ளது.

ஒப்பந்தம் குறித்த அறிவிப்பை அதிகாரபூர்வமாக வெளியிடுவதற்கு முன் அந்தச் சபையில் இது குறித்து கூடி விவாதிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூடானை ஆண்டு வந்த ஓமர் அல்-பஷீர், கடந்த 2019 ஆம் ஆண்டு இராணுவத்தால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். அதன்பிறகு இராணுவம் மற்றும் அரசியல் தலைவர்களைப் பிரதிநிதிகளாக கொண்ட இறையாண்மை சபையில் உருவாக்கப்பட்டு, இடைக்கால அரசாங்கமும் அமைக்கப்பட்டது. அந்த அரசாங்கத்தின் பிரதமராக அப்துல்லா ஹாம்டோக் பொறுப்பேற்றார். இந்த நிலையில், அந்த அரசாங்கத்தை இராணுவம் கடந்த மாதம் 25ஆம் திகதி கலைத்தது. மேலும், நாட்டில் அவசரநிலையும் பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இத்தாலிக்கு செல்ல முயன்ற 75 அகதிகள் கடலில் மூழ்கிப் பலி
## ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தகவல்

(ரோம்)

லிபியா அருகே மத்திய தரைக் கடலில் அகதிகளை ஏற்றி வந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 75 பேர் உயிரிழந்ததாக ஐ.நா. அகதிகள்நல அமைப்பு தெரிவித்தது.

இத்தாலிக்கு அடைக்கலம் தேடிச் சென்று கொண்டிருந்த அந்த அகதிகளில் 15 பேரை மட்டும் மீனவர்கள் மீட்டு லிபியா அழைத்துச் சென்றனர்.

கடந்த வாரம் லிபியாவைக் கடந்து சென்று கொண்டிருந்த போது படகு கவிழ்ந்து இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமாக மத்திய தரைக் கடல் வழியாக புலம்பெயரும் முயற்சிகளின்போது இந்த ஆண்டு இதுவரை ஆயிரத்து 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாக ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தெரிவித்தது.

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் 53 ஆயிரத்திற்கும் அதிகமான புலம்பெயர்ந்தோர் இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளனர்.

இது 2020 இல் வந்த அகதிகள் தொகையை விட கிட்டத்தட்ட இருமடங்கு அதிகமாகும் எனவும் இத்தாலிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# இழப்பீடும் வழங்கப்படவில்லை பட்ஜெட்டில் தீர்வும் இல்லை

## மன்.மீனவர் கூட்டுறவு சங்க சமாசம் ஆதங்கம்

(மன்னார்)

**இயற்கை அனர்த்தம் மற்றும் இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒரு ரூபாய் கூட இழப் பீடாக வழங்கப்படவில்லை எனவும் வரவு-செலவுத்திட்டத்தில் மீனவர்கள் கண்டு கொள்ளப்படவில்லை என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.**

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதாரச் சிக்கல்கள் தொடர்பாக பல தடவைகள் வெளிக்கொண்டு வந்திருந்தோம். ஆனால் யாரும் குறித்த விடயங்களை கண்டு கொள்ளவில்லை.

தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் தொழில் இழப்புகளுக்கு எந்தவித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. அண்மையில் ஏற்பட்ட சூறாவளியாக இருக்கட்டும், இயற்கை அனர்த்தமாக இருக்கட்டும், இந்திய மீனவர்களால் அண்மைக் காலமாக எமது மீனவர்களின் பாதிப்பு, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்களுக்கு இதுவரை ஒரு ரூபாய் கூட இழப்பீடாக மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் தொடர்ந்து கடற்றொழிலை மேற்கொண்டு தமது குடும்பத்தை கொண்டு செல்வதற்குக்கூட யாரும் உதவிகளை மேற்கொள்ள முன்வரவில்லை.

இந்த நிதியாண்டில் நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவு திட்டத்தில் மீனவர்களுக்கு ஏதாவது ஒரு இழப்பீட்டுத் தொகையோ அல்லது உதவித் தொகையோ ஒதுக்கீடு செய்யப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் அதுவும் நடைபெறவில்லை என அவர் தெரிவித்தார். (4-5-285)

# மோ.சைக்கிள்-முச்சக்கரவண்டி விபத்து ; இருவர் படுகாயம்



(குருமன்காடு)

வவுனியா, நெளுக்குளம் - செட்டிகுளம் வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும், முச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களே காயமடைந்த நிலையில், நோயாளர் காவு வண்டியின் மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-250)

# உயிரிழந்த மாணவியின் நினைவாக பாடசாலை நுழைவாயிலில் உருவப்படம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள பாதசாரிக் கடவையில் கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்த பாடசாலை மாணவி திருவாசகம் மதுசாளினிக்கான அஞ்சலி நிகழ்வும் பாடசாலை நுழைவாயிலில் அவரது உருவப்படம் திரை நீக்கமும் நேற்றுக் காலை பாடசாலையின் அதிபர் சவரி பூலோகராஜா தலைமையில் நடைபெற்றது.

மாணவியின் உருவப்படத்தை பாடசாலையின் பழைய மாணவர் கிளிநொச்சி வைத்தியசாலையின் வைத்தியர் மு.சிறிதர் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த மாணவியின் படத்திற்கு அஞ்சலி செலுத்தினர். (4-5-316)

# மேய்ச்சல் தரவை நெருக்கடி கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் தொடர்ச்சியாக இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் சுமார் 5,000 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ள போதிலும் மேய்ச்சல் தரவைகள் இல்லாத காரணத்தால் திருமுறிகண்டி, அக்கராயன், வன்னேரிக்குளம் வீதிகளிற்கு அருகில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துகின்ற நிலைமை காணப்படுகிறது.

கடந்த பத்தாண்டுகளாக கிளிநொச்சி மாவட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகளில் ஒன்றாக மேய்ச்சல் தரவை பிரச்சினை காணப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் பயிர்ச் செய்கை எவ்வளவு முக்கியமோ அதேபோன்று கால்நடை வளர்ப்பும் முக்கியமானதாகக் காணப்படுகிறது. எனவே மேய்ச்சல் தரவைகளுக்கான இடங்களை கிளிநொச்சி மாவட்டச் செயலகம் இனங்காட்ட வேண்டும் எனவும் கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-350)

# முகக் கவசம் அணியாதோர் மீது பொலிஸார் வலை வீச்சு



(நெளுக்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் நேற்றுக் காலை முதல் முகக்கவசம் அணியாமல் வீதிகளில் நடமாடுபவர்களுக்கு எதிராக பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முகக்கவசம் அணியாமல் வீதிகளில் நடமாடும் பலருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் அவர்களுக்கு முகக்கவசம் அணிவித்து அவர்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். (4-5-299)

# மத்தியஸ்தர் சபை மீள ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்தியஸ்தர் சபை நடவடிக்கைகள் கொவிட் தொற்று கால முடக்கத்தின் பின்னர் தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மாதத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் 2 ஆம் 3 ஆம் வார சனிக்கிழமைகளிலும் நடைபெறும் என மத்தியஸ்தர் சபை தவிசாளர் அறிவித்துள்ளார். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 420 | 360 | 360 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 170 | 180 | 200 |
| தக்காளி | 450 | 400 | 360 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 50 |
| கோவா | 200 | 300 | 350 | 320 |
| கரட் | 280 | 400 | 440 | 500 |
| பூசணி | 60 | 70 | 50 | 60 |
| புடோல் | 260 | 240 | 180 | 220 |
| வாழைக்காய் | 60 | 160 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 140 | 160 |
| பாகற்காய் | 550 | 600 | 550 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 240 | 180 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 500 | 420 | 350 | 400 |
| லீக்ஸ் | 250 | 350 | 480 | 520 |
| பீற்றூட் | 120 | 120 | 100 | 160 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 480 | 400 | 500 |
| போஞ்சி | 350 | 350 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | — | 330 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 360 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | — | — | — | 400 |
| முள்ளங்கி | 140 | 160 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 200 | 20 | 30 |
| ஈரப்பலா | --- | 160 | 60 | 120 |

# வவுனியாவில் இவ் வருடம் எட்டு காட்டு யானைகள் உயிரிழப்பு

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடம் எட்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிகின்றன.

அந்த வகையில் இவ் வருடம் நவம்பர் 22 வரையான காலப்பகுதியில் செட்டிகுளத்தில் 3, நெடுங்கேணியில் 3, வவுனியாவில் 2 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளன.

காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைகின்றதுடன் மக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்கின்றது. இதனால் மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வசித்து வருகின்றனர்.

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 10 யானைகள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2021- 15.12.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**எதையும் உற்சாகத்தோடு செய்யத் தொடங்கும் மிதுன இராசி வாசகர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் புதன், இலாபாதிபதி செவ்வாயோடு இணைந்திருக்கின்றார். எனவே, பொருளாதார நிலையில் முன்னேற்றம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உடல் நலத்தோடும், உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள்.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

மாதத் தொடக்கத்தில் இருந்து கார்த்திகை 20 ஆம் திகதி வரை செவ்வாய்-சனியின் பார்வை இருக்கின்றது. மகரத்திலுள்ள சனி துலாத்தில் உள்ள செவ்வாயைப் பார்க்கின்றார். செவ்வாய் மகரத்திலுள்ள சனியைப் பார்க்கின்றார். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. என்றாலும், குருவின் பார்வை இருப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. சகோதரர்களுக்குள் பூசல்கள் உருவாகும். வாங்கிய இடத்தை விற்க நேரிடுகின்றதே" என்று கவலைப் படுவீர்கள்.

### விருச்சிக புதனின் சஞ்சாரம்

கார்த்திகை முதல் நாளே விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன், 6ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். மக்கள் செல்வங்கள் மகிழ்ச்சிக்குரிய விதம் நடந்து கொள்வர். தக்க தருணத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். தனவரவு திருப்தியாக இருக்கும். இந்த நேரத்தில் கட்டடம் கட்டும் முயற்சி, கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.


## உடல் நலத்தோடும், உற்சாகத்தோடும் செயல்படுவீர்கள்

### தனுசு புதனின் சஞ்சாரம்

கார்த்திகை 18 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சுக்கிரனோடு சேர்ந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். அதுமட்டு மல்லாமல் உங்கள் இராசியையும் பார்க்கின்றார். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வெளிநாட்டு முயற்சி கை கூடும். பொதுவாழ்விலும், உத்தியோகத்திலும் உயர் பதவிகள் கிடைத்து உங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும்.

### மகர சுக்கிரனின் சஞ்சாரம்

கார்த்திகை 19 ஆம் திகதி மகர




இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். 12-க்கு அதிபதி அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விபரீத இராஜயோக அடிப்படையில் சில நல்ல சம்பவங்கள் நடைபெறலாம். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கிளைத் தொழில் தொடங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் திடீர் முன்னேற்றங்கள் வரலாம்.

### விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்

கார்த்திகை 20 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கு செவ்வாய் செல்வதால் உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. உற்சாகம் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எதையும் எளிதில் நம்பிச் செயற்படுவதால் துயரங்கள் கூடும். பல காரியங்கள் தாமதப்படலாம். ஆனந்த வாழ்வமைய அனுமனை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நாட்பட்ட நோய் அகலும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. கேட்ட இடத்திற்குப் பணி மாறுதல்கள் கிடைக்கும்.



**சந்தர்ப்பங்களை சாதகமாக்கிக் கொண்டு செயற்படும் கடக இராசி வாசகர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சந்திரன் செவ்வாயால் பார்க்கப்பட்டு சந்திர மங்கள யோகத்தை உருவாக்குகின்றார். அதேநேரத்தில் அஷ்டமத்தில் குருபகவான் அடியெடுத்து வைக்கின்றார். கண்டகச் சனியின் ஆதிக்கமும் பலமாக இருக்கின்றது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். முன்னெச்சரிக்கையோடு செயற்பட வேண்டிய நேரமிது.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

மாதத் தொடக்கத்தில் இருந்து கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி வரை செவ்வாய்-சனி பார்வையிருக்கின்றது. சனியின் பார்வை செவ்வாயின் மீதும், செவ்வாயின் பார்வை சனியின் மீதும் பதிகின்றது. இது அவ்வளவு நல்லதல்ல. திடீர் தாக்குதல்களும், மனக்கசப்பு தரும் தகவல்களும் வரலாம். உதவுவதாக உறுதி சொன்னவர்கள் கூட கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். பணிபுரியும் இடத்தில் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும்.

### விருச்சிக புதனின் சஞ்சாரம்

கார்த்திகை முதல் நாளே விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சகோதரர்களால் நன்மை ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு வெளிநாட்டிலிருந்து அழைப்புகள் வரலாம். ஆயினும் அஷ்டமத்துக் குருவின் ஆதிக்கம் இருப்பதால் சுய ஜாதகத்தை ஆராய்ந்து அதற்கேற்ப முடிவெடுத்துக் கொள்வதே நல்லது.

## முன்னெச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய நேரமிது

### தனுசு புதனின் சஞ்சாரம்

கார்த்திகை 18 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். அங்குள்ள சுக்கிரனோடு சேர்ந்து புத சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். உங்கள் இராசிக்கு விரயாதிபதியும், இலாபாதிபதியும் சேரும் இந்த நேரத்தில் விரயங்கள் அதிகரிக்கும்.

வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் அமைப்பு உண்டு.

வாகனத்தை மாற்ற வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அது இப்பொழுது கைகூடும். பெண் வழிப் பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும்.




### மகர சுக்கிரனின் சஞ்சாரம்

கார்த்திகை 19 ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன்.

அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். உறவினர்களுக்குக் கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகும். தொழிலில் கூட்டாளிகள் விலக நேரிடும்.

### விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்

கார்த்திகை 20 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாயாகும். அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் புதிய திருப்பங்களைக் காணப்போகிறீர்கள்.

தொழிலில் புதிய பங்குதாரர்கள் இணையலாம். பொது வாழ்வில் இருப்பவர்களுக்குப் பொறுப்புகள் மாற்றப்படும். பணி ஓய்வு பெற்றவர்கள் கூட மீண்டும் பணியில் சேர வாய்ப்புக் கிட்டும். சிவன் வழிபாடு சிறப்புகளை வழங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும். விரயங்கள் கூடுகின்றதே' என்று கவலைப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதே நல்லது. பிள்ளைகளால் வரும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணுங்கள்.

பணிபுரியும் பெண்களுக்கு மன நிறைவு இல்லாத மாற்றங்கள் கிடைக்கலாம். உறவினர்களையும், உடனிருப்பவர்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது.

(தொடரும்)

# கொன்சியூலர் விவகாரப் பிரிவின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் விவகார பிரிவின் இலத்திரனியல் ஆவணச் சான்றிதழ் சேவைகள் நேற்று திங்கட்கிழமை முதல் 150 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மின்னணு ஆவணச் சான்றளிப்பு முறைமையில் (e-DAS) ஏற்பட்ட கோளாறு காரணமாக கடந்த வாரம் சான்றளிப்பு சேவைகள் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் இதனால், சேவைகளை வழங்குவதில் நீண்ட கால தாமதம் ஏற்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 011- 2338812 அல்லது dgcons@mfa.gov.lk மூலம் கொன்சியூலர் விவகாரப் பிரிவை தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (நி-5)

# அரசாங்கத்தை வீழ்த்தும் சூழ்ச்சியில் பங்காளிக் கட்சிகள் - சாகர சாடல்

(கொழும்பு)

தவறுகள், முரண்பாடுகள் இருப்பின் அவற்றை அமைச்சரவையில் பேசித்தீர்க்க வேண்டும். அதை விடுத்து வெளியில் கூறுவது மிக மோசமான அரசியல் நாகரிகம் என சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கத்தை குழப்பும் நபர்கள் வெளியேறினால் எம்மாலும் தூய்மையான அரசாங்கத்தை கொண்டு நடத்த முடியும். அரசாங்கத்தில் சில தவறுகள் இடம்பெறுவது குறித்தும் நாமும் முரண்படுகின்றோம்.

ஆனால் அவற்றை உடனடியாக திருத்திக்கொள்ள அரசாங்கத்தில் உள்ள மேல் இடத்திற்கு முறையாகக் கொண்டு சேர்க்கின்றோம். மாறாக வெளிப்படையாக விமர்சித்து அரசாங்கத்தை பலவீனப்படுத்த நாம் முயற்சிக்கவில்லை.

ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தில் பேச வேண்டிய விடயங்களை வெளியில் பிரசித்திப்படுத்தி அரசாங்கத்தை வீழ்த்தும் சூழ்ச்சியை முன்னெடுத்து வருகின்றன.



அமைச்சரவையில் பூனைகள் போன்று அமர்ந்துகொள்ளும் ஒரு சிலர் வெளியில் சிங்கங்கள் போன்று கர்ச்சிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# இரசாயன உரம், கிருமி நாசினிகளை இறக்குமதி செய்ய அனுமதியில்லை

(கொழும்பு)

பெரும்போக விவசாயத்திற்காக உரிய தரத்திலான இரசாயன உரம் மற்றும் கிருமி நாசினிகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித்கே ஜெயசிங்க தெரிவித்திருந்த நிலையில் விவசாயத்துறை அமைச் சர் மகிந்தானந்த அளுத்கமகே அதனை மறுத்துள்ளார்.

அதேபோல் சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்ட உரத்தின் தரத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அது மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ள போதிலும் அதற்கான நட்டஈடு 6 பில்லியன் ரூபாய் வழங்க வேண்டியுள்ளதாகவும், அதேபோல் மீண்டும் தரத்தை உறுதி செய்த உரம் அதே சீன நிறுவனத்திடம் இருந்தே இறக்குமதி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# சூழல் மாசடைவதை தடுக்க 180 மில்லி லீற்றர் போத்தல்களுக்கு தடை

(கொழும்பு)

கடந்த 2018 ஆம் ஆண்டு 10 கோடிக்கு அதிகமான 180 மில்லி லீற்றர் (கால் போத்தல்) வெற்றுச் சாராயப் போத்தல்கள் சுற்றாடலுக்குள் சேர்ந்துள்ளதாக ஆய்வு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

இதனால், சுற்றாடலுக்கு ஏற்படும் அழிவை தடுப்பதற்காக உடனடியாக 180 மில்லி லீற்றர் போத்தல்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்க உள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பயன்படுத்தப்படும் சாராய போத்தல்களில் 5 வீதம் மறுசுழற்சி செய்யப்படுவதில்லை. சாராயப் போத்தல்களால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு சம்பந்தமாக உழவர்கள், கமத்தொழில் அமைப்புகள் உட்பட பலதரப்பினர் குற்றம் சுமத்தி வருகின்றனர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5)

## வவுனிக்குளத்தின் மேலதிக அபிவிருத்தியை பூர்த்தி செய்து தாருங்கள்

### விவசாய அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வவுனிக்குளத்தின் மேலதிக அபிவிருத்திகளுக்குரிய நிதிகளை துறைசார் அமைச்சுக்களிடமிருந்து பெற்று குளத்தின் கீழான கட்டுமாணங்களை புனரமைத்துத் தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் கடந்த 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புனரமைக்கப்பட்டது. இவ்வாறு குளம் புனரமைக்கப்பட்டபோதும் குளத்தின் கீழ் உள்ள நீர்விநியோக வாய்க்கால்கள், விவசாய வீதிகள், கழிவு வாய்க்கால்கள் என்பன புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் பயிர்ச்செய்கை காலங்களில் விவசாயிகள் விளை பொருட்களையும் விவசாய உள்ளீடுகளை கொண்டு செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளதுடன், குறித்த குளத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன வீதிகள், நீர்விநியோக வாய்க்கால்கள் என்பவற்றை புனரமைப்பதற்கான நிதிகளை உரிய திணைக்களங்கள் அமைச்சுக்களிடமிருந்து பெற்று மேற்படி புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துத் தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (4-5-315)

# இன்று ஒரு தகவல்

## பணிந்து உயரும் பண்பாளர் ஆவோம்.

நம்மைப்பற்றி நாம் மிக உயர்வாக எண்ணிக்கொண்டு இருந்தால் நாம் மட்டும் எண்ணிக் கொண்டிருக்க வேண்டியது தான். ஆனால், நம்மைப்பற்றி உயர்வான எண்ணம் மற்றவர்களுக்குப்பரவ வேண்டுமானால் நம்மிடம் பணிவும் அடக்கமும் ஏற்பட வேண்டும்.

நான் ஏன் அடங்கிப்போக வேண்டும்? நான் எந்த விதத்தில் தாழ்ந்து விட்டேன். நான் என்ன கீழானவனா? நான் இப்படியெல்லாம் நடக்க வேண்டிய அவசியம் தான் என்ன? என்றெல்லாம் மனதில் எழும் அநாவசியமான கேள்விகள், விரைந்து முன்னேறிக்கொண்டிருக்கும் நம் வாழ்க்கைப் பாதைக்குப் பயங்கரமான தடைகற்களாக அமைந்து விடும்.

உங்களைப்பற்றி உயர்வாகச் சொல்லிக்கொள்கிறீர்களா? உங்களைத் தாழ்த்திப் பேசும் உங்க்ளைப்பற்றி அடக்கமாகவோ, குறைத்தோ கூறிக்கொள்கிறீர்களா? உங்களை உயர்த்திப் போற்றும், இது தான் உலகம்.

முரடர்கள், சகுனிகள், வீம்புக்காரர்கள் உங்கள் வாழ்க்கையில் குறுக்கிடும் இத்தகையவர்களைச் சமாளித்து உங்கள் வழிக்குக் கொண்டு வந்து வெற்றி காண வேண்டுமா? பணிவு ஒன்று தான் வழி.

மேற்கூறியவர்களுக்குச் சரிசமமான செயல்களில் நாமும் இறங்கினால் நூற்றுக்குத் தொண்ணூறு விடயங்களில் தோல்வி தான் மிஞ்சும்.

ஒருவரிடம் பதவி இருக்கலாம்; செல்வாக்கு இருக்கலாம்; பணம் இருக்கலாம். இவையெல்லாம் இருந்தும் பணிவு மட்டும் இல்லாவிட்டால் அது முதல் இலக்கம் இல்லாத பூச்சியங்களைப் போன்று மதிப்பில்லாமல் போய் விடும்.

ஓர் இராட்சத விமானம் பலரும் வியக்கப் பறக்க வேண்டுமானால் அந்த விமானத்தினுள் போதுமான எடை வேண்டும். (மனித எடை இல்லாவிட்டால் மணல் மூட்டைகளையாவது ஏற்றி அடுக்கினால் தான் அந்த விமானம் பறக்கும்) ஒரு மனிதன் எல்லாத் தகுதிகளையும் பெற்றிருந்தாலும் பலரும் புகழப் பவனி வர வேண்டும் என்றால் அவனுக்குப் பணிவு என்னும் எடை தேவை.

ஆக எடையுள்ள விமானந்தான் உயர்ந்து பறக்கும், பணிவுள்ள மனிதன் தான் உயர்வைப் பெற முடியும்.

சூல் கொள்ளாத நெற்பயிர் விரைந்து நிற்கிறது. முற்றிய நெற்பயிர் சாய்ந்து கிடக்கிறது.

கன்னிப்பெண் குதித்துக்குதித்து நடக்கிறாள்! கர்ப்பிணிப்பெண் கனிவாக நடக்கிறாள்.

பணிவற்ற தன்மை அனைவரையும் புறக்கணிப்பதோடும், அவர்கள் காட்டும் நல்ல வழிகளையும் புறக்கணிக்கச் செய்யும். இத்தகையச் செயல் நம் நற்பெயருக்கோ, எதிர்கால வாழ்வுக்கோ நல்லதல்ல.

**லேனா தமிழ்வாணன்**

# சிறுவர் அரங்கம்

## அதிசய பூசணிக்காய்

பாவம் குஞ்சுகள் பசியால் கத்தியது, அதைக் கண்ட உழவரும், குழந்தைகளும் தங்களுடைய உணவில் கொஞ்சம் கொடுத்தது, குஞ்சுகளின் பசியைப் போக்கினார்கள்.

திடீரென்று அந்தக் குருவிக் கூட்டுக்குள் ஒரு பாம்பு நுழைந்தது. குருவிக் குஞ்சுகளைப் பிடித்துச் சாப்பிடச் சென்றது, உடனே அங்கு வந்த உழவர் பாம்பை அடித்துக் கொன்றார்.

கொஞ்ச நேரத்தில் தாய் குருவி வீட்டிற்கு வந்தது, குஞ்சுகள்சொன்னதைக் கேட்டது, தாய்க்குருவி ஆனந்தக் கண்ணீர் விட்டது.


அடுத்த சில நாட்களில் உழவரும் குடும்பத்தினரும் வறுமையில் வாடினார்கள்.

குஞ் சுகள் வளர்ந்ததும், தாய் குருவியும், குஞ்சுகளும் உழவர் மற்றும் குடும்பத்தினரிடம் நன்றி கூறி வானில் பறந்து போயின.

சில நாட்களில் உழவரின் வீட்டில் சாப்பிடவே தானியங்கள் இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

“இப்படியே அரை வயிறு சாப்பிட்டு எவ்வளவு காலம் வாழ்வது? நமக்கு விடிவே கிடையாதா?” என்றாள் மனைவி.

அப்பொழுது அவர்கள் வீட்டுக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. கதவை திறந்தார் உழவர். அங்கே



அவர்கள் வீட்டில் கூடு கட்டிய தாய் குருவி இருந்தது. அதன் வாயில் ஒரு விதை இருந்தது. அதை அவர் கையில் வைத்தது.

இதை உங்கள் வீட்டுத் தோட்டத்தில் நடுங்கள். சிறிது நேரத்தில் வருகிறேன்” என்று சொல்லிவிட்டுப் பறந்தது அது. மீண்டும் வந்தது அது. இன்னொரு விதையைத் தந்தது.

இதை உங்கள் வீட்டின் முன்புறத்தில் நடு” என்று சொல்லிவிட்டுப் பறந்தது.

மூன்றாம் முறையாக வந்த அது இன்னொரு விதையைத் தந்தது ” இதை ஜன்னல் ஓரம் நடுங்கள்.

எங்கள் மீது காட்டிய அன்பிற்கு நன்றி” என்று சொல்லிவிட்டுப் பறந்தது.

குருவி சொன்னபடியே மூன்று விதைகளையும் நல்லதம்பி நட்டார்.

மறுநாள் காலையில் அங்கே மூன்று பெரிய பூசணிக் காய்கள் காய்த்து இருந்தன. இதைப் பார்த்து வியப்பு அடைந்தார்.

தோட்டத்தில் இருந்த பூசணிக்காயை வீட்டிற்குள் கொண்டு வந்தார். அதை இரண்டு துண்டாக வெட்டினார் நல்லதம்பி.

(தொடரும்)

# மகாபாரதம்




எவ்வளவோ முயற்சிக ளில் ஈடுபட்டேன். பயன் இல்லை. ஆயினும்விடாமுயற்சியுடன் இரு கன்றுகளை, ஏரில் பழக்கலாம் என நுகத்தடியில் பூட்டி ஓட்டினேன்.

ஒட்டகம் ஒன்று கன்றுகளை நுகத்தடியுடன் தூக்கிச் சென்று விட்டது. கன்றுகளை எவ்வளவு முயன்றும் ஒட்டகத்தின் பிடியிலிருந்து மீட்க முடியவில்லை.

அந்த ஒட்டகத்தின் இருபுறமும் கட்டித் தொங்கவிடப்பட்ட மணிகள் போல கன்றுக்குட்டிகள் தொங்குகின்றன.

தெய்வ சம்மதம் இல்லா முயற்சியில் என்ன பயன். உண்மையான இன்பம் என்பது பொருள் ஆசையைத் துறப்பதுதான்.ஆசையை நிறைவேற்றுவது இன்பமல்ல. ஆசையே இல்லாமல் இருப்பதுதான் நிலையான இன்பம். பொருள் பெருகப் பெருக ஆசையும் பெருகிக் கொண்டே போகும்.

என் ஆசை நிறைவேறிவிட்டது என நிம்மதியுடன் இருக்கும் மனிதனைக்காண்பது அரிது. பேராசை கொண்ட மனம் வைராக்கியம் கொண்டு பொருள் பற்றினின்று விலக வேண்டும். பொருள் சேர்க்க சேர்க்க அது அழிந்து கொண்டிருக்கக் கண்டும் மீண்டும் அதன் மீது நாட்டம் ஏன்” என பலவாறு சிந்தித்தார் மங்கி.

பின் உறுதி கொண்டு எழுந்தார். “இப்போது என் மனம் உறுதி மிக்கதாய் ஆகிவிட்டது. ஆசையே உன்னை மட்டும் நான் விட்டு விடுவேனா. உன்னையும்வேருடன் களைந்து எறிந்து விட்டேன்.

பொருள் ஆசை துக்ககரமானது என்பதை அறிந்து கொண்ட நான், ஆசையை மட்டும் வளர விடுவேனா? இனி நான் எனக்கு உண்டாகும் துன்பங்கள் அனைத்தையும் பொறுத்துக் கொள்வேன். பிறர் எனக்குத் துன்பம் தந்தாலும் நான் அவர்க்கு துன்பம் தர மாட்டேன்.

ஆசையே இனி எனக்கு எது கிடைக்கிறதோ அதைக் கொண்டு மன நிறைவு கொள்வேன். பழைய வாழ்க்கை இனி இல்லை. வைராக்கியம் மேலிடுகிறது.

இன்பம், மன நிறைவு, புலனடக்கம், வாய்மை, பொறுமை ஆகிய அனைத்தும் இப்போது என்னிடம் இருக்கின்றன.

ஆசையே! நீ ரஜோ குணத்திலிருந்து பிறந்தாய். உன்னை ஒழிக்க வேண்டுமானால் முதலில் ரஜோ குணத்தைத் தொலைக்க வேண்டும். குளிர்ந்த நீரில் இறங்கித் தாகத்தை போக்கிக் கொள்வது போல, பரம்பொருளைச் சார்ந்து கர்மங்களை ஒழிப்பேன்.

ஆசையை அறவே துறப்பதால் ஏற்படும் இன்பம், அதைப் பெறுவதால் ஏற்படும் இன்பத்தை விடப் பல மடங்கு உயர்ந்ததாகும்.

ஆன்மாவை அலைக்கழிப்பதில் பொறாமை, வஞ்சனை ஆகிய இவற்றைக் காட்டிலும் ஆசையே மிகவும் சக்தி வாய்ந்தது.

இவை அனைத்தையும் வைராக்கியம் என்னும் வாளால் வெட்டி வீழ்த்திப் பரமானந்தத்தில் திளைக்கப் போகிறேன்” என்றார் மங்கி.

தருமா.. இவ்வாறு மங்கி வைராக்கியம் மேலிட, எல்லா ஆசைகளையும் துறந்து அஞ்ஞானத்தை வேரறுத்து முடிவில் பிரமபதத்தை அடைந்து பேரானந்தம் அடைந்தார்.

(தொடரும்)

நன்மை செய்ய நமக்குக் கிட்டும் வாய்ப்புகளே நம் திறமைகள்! – காட்டன் மேதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வடக்கு மாகாண ஆளுநரின் நேர்க்கணிய சிந்தனைக்கு பலமாக இருப்போம்!

மாகாண சபைக் கட்டமைப்பில் ஆளுநரின் அதிகாரங்களும் பொறுப்புக்களும் வலிமை மிக்கவை என்பது தெரிந்ததே.

மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண அரசாங்கம் நடைமுறையில் இருக்கும் போதும் ஆளுநரின் ஒப்புதல்களைப் பெற வேண்டிய விடயங்கள் அரசியலமைப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மாறாக, மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசாங்கத்தின் ஆயுட்காலம் முடிவுற்று அடுத்த தேர்தல் நடைபெற்று அதில் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற இடைவெளியில் மாகாண சபை நிர்வாகத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பும் அந்தந்த மாகாண சபையின் ஆளுநர்களையே சாரும்.

அந்தவகையில், வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா அவர்கள் நியமிக்கப்பட்டு, கடமையைப் பொறுப்பேற்றதில் இருந்து அவரின் அணுகுமுறைகளும் நிர்வாக ஒழுங்குபடுத்தல்களும் அவர் மீதான கவனத்தை ஈர்த்துள்ளன.

பொதுவில் ஆளுநர் என்னும் பதவியை அலங்கரிக்கின்ற தனிமனிதரின் ஆளுமைப் பண்புகள் மற்றும் அவரின் பலம் என்பன குறித்த மாகாணத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் – மாகாண அபிவிருத்தியில் – உட்கட்டுமானப் பணிகளில் மிகக் காத்திரமான தாக்கத்தைச் செலுத்தும்.

அந்தவகையில் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்கள் அரசியல் என்ற எல்லைகளைக் கடந்து, தான் ஆளுநராக இருக்கக் கூடிய மாகாணம் சார்ந்த மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் நிர்வாகக் கட்டமைப்புகளை செயற்றிறன்மிக்கதாக ஆக்குவதிலும் அதீத கவனம் செலுத்தி வருவது பற்றிப் பலரும் சாதகமாக உரையாடத் தலைப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலாக, அவரின் அணுகுமுறைகள் நேர்விளைவை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பதும் இங்கு நோக்குதற்குரியது.

எனவே வடக்கு மாகாணத்தின் ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்கள் முன்னெடுக்கின்ற பணிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி, அவரின் செயற்றிட்டங்கள் வெற்றி பெற உதவ வேண்டும் என்பதுடன்,

ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நம் புத்திஜீவிகளும் பட்டறிவுமிக்கோரும் அவருக்கு வழங்கி வடக்கு மாகாணத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் நம் தாழ்மையான கோரிக்கை.

# மாவீரர் நாள் நினைவேந்தலை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது

## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எது எப்படி இருந்தாலும் மாவீரர் நாளை நினைவேந்துவதை உலகில் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை மக்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும் என தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளரும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொருவரும் தங்களின் இறந்த மாவீரர்களை நினைவேந்த வேண்டும். அதனால், இந்தத் தடையுத் தரவுகளை உடைத்தெறிய வேண்டும்.

நூற்றுக்கணக்கிலோ, ஆயிரக்கணக்கிலே நாங்கள் திரள்கின்ற போது, கொரோனாவை இவர்கள் காரணம் காட்டினால் இடைவெளிகளைப் பேணி நாங்கள் இதை செய்ய முடியும்.

ஆகவே, இதை வைத்து கொண்டு தடையுத்தரவு பெற முயற்சிப்பது இலங்கை அரசாங்கத்தினுடைய அடக்குமுறையாகவே நாங்கள் இதைப் பார்க்கின்றோம்.

இந்த அடக்குமுறைகள் உடைத்தெறியப்பட வேண்டும். அதற்கு, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள், கட்சிகள், பொதுமக்கள், செயற்பாட்டாளர்கள் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,33)

# வீதி விதிகளைக் கடைப்பிடித்து பொறுப்புடன் செயற்படுவோம்

## மருத்துவர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் சமீப காலமாக வீதி விபத்துக்களில் அதிகரிப்புக் காணப்படுகிறது.

இதனால் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர் தொகையும் அதிகரித்துக் காணப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா கவலை தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்த காலத்தில் இராணுவ வாகனங்களால் விபத்துக்கள் நடைபெற்றன. இன்று அரச வாகனங்கள் அந்த வேலையை செய்கின்றன. உயர் அதிகாரம் கொண்ட திணைக்கள வாகனங்கள் வீதி விதிகளை மதிக்காது செயற்படுவது சாதாரண மக்களையும் அவ்வாறே செயற்படத்தூண்டும். அரச வாகனங்கள் மற்றவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டும்.

அத்துடன் இளைஞர்களை இரத்ததானம் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

அவ்வாறான நிகழ்வுகளின் மூலம் அவர்களிடையே சமூகப் பொறுப்புணர்ச்சியை வளர்க்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

### இலங்கையின் பொருளாதாரம் குறித்து

# உலக வங்கி கவலை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று இலங்கையின் பொருளாதாரத்தில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஏற்பாடு செய்திருந்த இணைய வழி மூலமான நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே, தெற்காசியப் பிராந்தியத்தின் பிரதம பொருளாதார விசேட ஆய்வாளர் ஹான்ஸ் ரிமர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் முக்கிய பிரச்சினை, மொத்த உற்பத்திக்கு அமைவாக நடைமுறையில் உள்ள கடன் அதிகமாக இருப்பதேயாகும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (நி-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

வவுனியா பிரதேசத்தில் கச்சேரி, கூமாங்குளம், கிருஷ்ணா மெடி கிளினிக், சாந்தசோலை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்."**

**-தோமஸ் அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்)**

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வெற்றி வாழ்வின் இரகசியம்

❖ நன்மை செய்யவும், நல்லவர்களாக வாழவும் விரும்புபவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

❖ உண்மை எதற்கும் தலை வணங்கத் தேவையில்லை. மனித சமூகம் தான் உண்மைக்குத் தலை வணங்க வேண்டும்.

❖ எல்லாவிதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது. அதை விழித்து எழச் செய்வதே நல்லாசிரியரின் கடமை.

❖ இன்றைய கல்வித்திட்டம் மனிதனை இயந்திரமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஒழுக்கம், மனவலிமை, பரந்த அறிவு இவற்றை புகட்டுவதாக கல்வித்திட்டம் மாற வேண்டும்.

❖ மனிதர்கள் விலங்குகளை விட அதிக ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயக் கட்டுப்பாடு என்ற சாட்டையால் மனிதன் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறான்.

❖ கற்புநெறியில் இருந்து பிறழும் போது, மனித சமூகம் முடிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

❖ நாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றி வாழ்வுக்கான ரகசியம்.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

21

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



முடிச்சுகளின் வகைகள்




எனினும் பல ஊர்களில், பதிவு செய்யும் தேவைகளுக்காகவன்றி சடங்குத் தேவைக்காக, கிப்பு ஒரு முக்கியமான பொருளாகவே இருந்து வந்தது. எங்கே, எப்படி சேதமடையாத கிப்புக்கள் இன்னும் இருக்கின்றன என்பது குறித்துத் தெளிவில்லை. பல கிப்புக்கள் இறந்தவர்களின் உடல்களுடன் கல்லறைகளில் வைக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

கிப்புக்களில் பதியப்பட்டிருந்த தகவல்கள் பெரும்பாலும் பதின்ம முறையில் அமைந்த எண்கள் ஆகும். ஸ்பானியர்கள் ஆக்கிரமித்த தொடக்க காலங்களில், ஸ்பானிய அலுவலர்கள், திறை செலுத்தல், பொருட்களின் உற்பத்தி போன்றவை தொடர்பான தகராறுகளைத் தீர்ப்பதற்கு கிப்புக்களிலேயே தங்கியிருந்தனர். ஸ்பானிய வரலாற்று எழுத்தாளர்களும் கிப்பு என்பது எண் தொடர்பான தகவல்களை நினைவில் வைத்திருப்பதற்கான சாதனம் என்றே கூறுகின்றனர்.

சில வகை முடிச்சுக்களும் நிறம் போன்ற வேறு அம்சங்களும் எண்ணல்லாத பிற தகவல்களைக் குறிப்பிடுவதாக நம்பப்படுகிறது. ஆனாலும், இத்தகைய குறியீடுகள் எதுவும் இன்னும் படித்து அறியப்படவில்லை.

## குறியீட்டு முறை

மார்ச்சா ஆசரும், ராபர்ட் ஆசரும் (Marcia Ascher and Robert Ascher) பல நூற்றுக் கணக்கான கிப்புக்களை ஆய்வு செய்து, அவற்றில் உள்ள பெரும்பாலான தகவல்கள் எண் சார்ந்தவையே எனவும் அவற்றை வாசிக்க முடியும் எனவும் கண்டறிந்துள்ளனர். இவற்றில் காணப்படும் ஒவ்வொரு முடிச்சுத் தொகுதியும் ஒரு இலக்கத்தைக் (digit) குறிக்கும். கிப்புக்களில் மூன்று வகையான முடிச்சுக்கள் காணப்பட்டன. இவை, பொதுவான நுனி முடிச்சு (overhand knot), "நீண்ட முடிச்சு", எட்டு வடிவ முடிச்சு என்பன. நீண்ட முடிச்சு, என்பது நுனி முடிச்சுடன் கூடுதலாக ஒரு சுற்றுச் சேர்ந்தது.

ஆசரின் முறையில், எட்டு வடிவ முடிச்சுடன், கூடுதல் முறுக்கும் சேர்ந்த நான்காவது வகையும் உண்டு. இது, "EE" எனப்படும். கிப்பு முறைமையில், எண்கள், தொடராக உருவாக்கப்படும் முடிச்சுத் தொகுதிகளினால் குறிக்கப்படுகின்றன. இவை பத்தை அடியாகக் கொண்டவை.

இழையொன்றில் வரிசையாக அமைந்துள்ள முடிச்சுத் தொகுதி கள் இழையில் அவற்றின் இடத் தைப் பொறுத்து பத்தின் வெவ்வேறு படிகளைக் குறிக்கின்றன. இழையின் கீழ் நுனியை அண்டியுள்ள முடிச்சுக்கள் ஒன்றுகளையும் அதற்கு மேலுள்ளவை பத்துக்களையும் அதற்கும் மேலே உள்ளவை நூறுகளையும் குறிக்கின்றன.

பத்துக்களைக் குறிக்கும் இடத்திலும் அதற்கு மேலுள்ள இடங்களிலும் அமைந்த இலக்கங்கள் எளிமையான முடிச்சுக்களின் தொகுதியால் குறிக்கப்படுகின்றன. (உதாரணம், பத்தின் இடத்தில் 4 எளிய முடிச்சுக்களின் தொகுதி 40 ஐக் குறிக்கும்).

ஒன்றின் இடத்தில் உள்ள இலக்கங்கள் நீண்ட முடிச்சுக்களினால் குறிக்கப்படுகின்றன. (உதாரணம் 4 சுற்றுக்களுடன் கூடிய ஒரு முடிச்சு எண் 4 ஐக் குறிக்கும்). இந்த வகையில் ஒன்று என்னும் இலக்கத்தைக் குறிக்க முடியாது. அதனால் "ஒன்று" இலக்கம் எட்டு வடிவ முடிச்சினால் காட்டப்படுகிறது. குறித்த இடத்தில் முடிச்சு எதுவும் இல்லாதிருப்பது பூச்சியத்தைக் குறிக்கும்.

ஒன்றுகளைக் குறிக்கும் இலக்கத்துக்கான முடிச்சுகள் வேறுபட்ட முறையில் அமைவதால், எண் எங்கு முடிவடைகிறது என்பதைக் கண்டு கொள்ள முடிகிறது. இதனால், ஒரே இழையில் பல எண்களைக் காட்டுவதும் சாத்தியமாகிறது. உரு 14 ஐப் பார்க்க. 1583 இல், கிப்புக்களை சாத்தானின் வேலையாகக் கருதி, அவற்றை முற்றிலும் அழிக்குமாறு ரோமன் கத்தோலிக்க திருச்சபை உத்தரவு பிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.


## காக்டோவிக் எண் முறைமை (Kaktovik numerals)

1990களின் முற்பகுதியில், அலாஸ்காவின் காக்டோவிக் நகரில் உள்ள ஹரோல்ட் கேவலூக் பள்ளியில் ஒரு கணித செறிவூட்டல் செயற்பாட்டின் போது, மாணவர்கள் தங்கள் மொழி எண்கள் 20 அடியாகக் கொண்ட ஒரு முறையைப் பயன்படுத்துவதைக் கண்டனர், மேலும் அவர்கள் எண்களை எழுதவோ அல்லது அரபு எண்களுடன் எண்கணிதத்தை செய்யவோ முயன்றபோது, அவ் எண்களைக் (Iñupiaq) குறிக்க அவர்களால் முடியவில்லை.

(தொடரும்)


கிப்பு எண்முறைமை (Quipu numerals)

கூட்டல் முறை




நீங்களும் முயற்சிக்கலாம் 15


a=? b=? c=?




132 + 417 + 3 = 552

விடை a=5, b=5, c=2

எண்கள் முடிச்சுகளினால் காட்டப்படுகின்றன ( உரு 14)



## கோவிட் பலி...

காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை மீண்டும் திடீரென அதிகரித்துள்ளது.

நாட்டில் மேலும் 31 பேர் கோவிட்டால் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,158 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 93 மேலதிக...

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

அதன்படி, நேற்று வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

அதனடிப்படையில் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் வழங்கப்பட்டிருந்தது.

வரவு - செலவுத் திட்டம் மீதான மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஜனாதிபதி செய...

டிருந்தது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக பயிற்சி நிலையத்தில் மக்களின் கருத்தை அறியும் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

"ஒரே நாடு -ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட கல்வியலாளர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-3)

## சாவகச்சேரியில்...

தார முறைப்படி தகனம் செய்யப்படவுள்ளது. (ம-3,30)

## உணவுப் பொதி...

யில், பகலுணவுப் பொதியொன்றின் விலையை 20 ரூபாயினாலும் ஒரு கோப்பை தேநீரின் விலையை 5 ரூபாயினாலும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் இந்த விலை அதிகரிப்பு அமுலாகும் என அச்சங்கம் தெரிவித்துள்ளது. (ம-3)

## +735...

சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 557, 361 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## பனையால்...

ஞாயிற்றுக்கிழமை மாலை சீவல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவர் தவறிவிழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சடலத்தைப் பார்வையிட்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ம-3,60)

## மாவீரர் நாள்...

சாவகச்சேரி, மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்து கட்டளையிட்டன.

"விண்ணப்பங்களில் பிரதிவாதிகளினால் குறிப்பிடப்பட்டுள்ளோர் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை மற்றும் கோவிட்-19 தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும்.

எனினும் குற்றமிழைக்கப்படலாம் என்ற அடிப்படையில் தடை உத்தரவு கட்டளை வழங்க முடியாது" என்று விண்ணப்பங்கள் நீதவான் நீதிமன்றங்களினால் தள்ளுபடி செய்யப்பட்டன.

சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற எல்லைக்குள் உள்ள இரண்டு பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மல்லாகம் நீதவான் நீதிமன்ற எல்லைக்கு உட்பட்ட 8 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் பருத்தித்துறை நீதிமன்ற எல்லையில் உள்ள 3 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளினால் இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் விண்ணப்பங்கள் அடிப்படையற்றவை என்றும் மன்று தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிமன்றங்கள், குற்றவியல் நடவடிக்கை சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டம் மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது என்று சுட்டிக்காட்டி விண்ணப்பங்களை நிராகரித்தன. (ம-3,18,33,60,104)

## அரசுடன் இணங்...

யுள்ளார்.

இயற்கை பசளைகளை மட்டுமே அரசாங்கம் விநியோகிப்பதாகவும் இயற்கை விவசாயத்திற்கு மாத்திரமே மானியங்களை வழங்குவதாகவும்,

இந்தநிலையில் விவசாயிகள் முறையாக பயிற்றப்படவேண்டும். இதை செயற்படுத்தும்போது இரசாயன பசளை மாஃபியாவை அடையாளம் காணவேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

சரியான கொள்கையை வெற்றியடையச் செய்வதற்கு அதிகாரிகளின் அர்ப்பணிப்பு அவசியமானது என்று இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## ஒரு நாடு...

ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக செயற்படும் அருட்தந்தை சிறில் காமினி அடிகளாரை வாக்குமூலம் என்ற போர்வையில் அலைக்கழிப்பதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2022ஆம் வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

## அனை...

கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் தகவல் வெளியிட்டுள்ள அவர்,

வீதிகளில் தனித்து வாகனங்களில் செல்வதை தடை செய்ய வேண்டும் எனவும் வாகனங்களில் கட்டாயம் மூவர் அல்லது நான்கு பேர் பயணிக்க வேண்டும் என்ற சட்டத்தை கொண்டுவர வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## இலங்...

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், சர்வதேச அழுத்தம் முக்கிய காரணமாக மாறியுள்ளது என அவர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியை தனியாக எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றும் பீரிஸ் தெரிவித்தார். (ம-3)

## மின்சக்தி அமைச்சருக்கு கொரோனா



(கொழும்பு)

மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றுக்குள்ளாகிய அமைச்சர் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவருடன் நெருங்கிப் பழகியோர் தனிமைப்படுத்தப்பட்டனர். (ம-3)


வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் அச்சகத்துக்கு பெண் கணனி வடிவமைப்பாளர் தேவை. **கோறல்றோ** அண்ட் **போட்டோசொப்** தெரிந்திருப்பின் முன்னுரிமை. பயிலுனர்களும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும்.

சரவணா அச்சகம்

238, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 077 563 1562



தன நிதானய

திகதி - 2021.11.22

சீட்டிழுப்பு இலக்கம் - 624

G 03 41 42 44

கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 22.11.2021

சீட்டிழுப்பு இலக்கம் 2889

Y 26 44 47 64

மஹஜன சம்பத

திகதி 2021/11/22

சீட்டிழுப்பு இலக்கம் 4594

Z 0 7 6 7 3 6

மெகா பவர்

திகதி 22/11/2021

சீட்டிழுப்பு இலக்கம் 0942

N 06 03 43 66 69

ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 22/11/2021

சீட்டிழுப்பு இலக்கம் 1169

கன்னி 5 7 3 0 4 1

அத கோடிபதி

கிழமை: திங்கட்கிழமை

சீட்டிழுப்பு இல: 1397

வர்ணம்: சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 22.11.2021

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,178,840

வெற்றி இலக்கங்கள் 26 53 57 76 U

சனிதா

கிழமை: திங்கட்கிழமை

சீட்டிழுப்பு இல: 3732

வர்ணம்: நீலம்

சீட்டிழுப்பு திகதி: 22.11.2021

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,641,820

வெற்றி இலக்கங்கள் 07 52 70 73 N

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1571 நிறம் ஊதா

சீட்டிழுப்பு திகதி 22.11.2021 தினம் திங்கள்

1 15 18 45 50

அடுத்த சுப்பர் ஜக்பொட்: 71,244,089/=

ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,506,356/=

திகதி 22.11.2021

வெற்றி வாரம் 3283

வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் 16 26 47 48 மேடம்

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,936,436/=

ஜயோதா

சீட்டிழுப்பு வாரம் 1787

சீட்டிழுப்பு திகதி 22.11.2021

வெற்றி இலக்கங்கள் 34 35 38 62 G

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 28,141,980/-

தொ. பே.: 0112 333 546/47

Web: www.dlb.lk

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

கடந்த (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று
இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சட்டநாதர் செவ்வந்திநாதர்



- ஓய்வுநிலை பிரதேச சபை செயலாளர் (பருத்தித்துறை பிரதேச சபை - மந்திகை, புலோலி)
- முன்னாள் கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்
- யோகா ஆசான்
- சமாதான நீதவான்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று
(23.11.2021) செவ்வாய்க்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில்
நடைபெறும்.

பிறப்பு 20.04.1938

இறப்பு 24.10.2021

இலகடி வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி. (8592)

குடும்பத்தினர்


## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org (8739)

021 222 8093 புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

## முன்பள்ளி வேலை வாய்ப்பு

( லிற்றில் மாஸ்ரேஸ் மொண்டிசூரி ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலை )

- முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்
- முன்பள்ளி தமிழ் ஆசிரியர்
- சிங்கள எழுத்துப்பயிற்சி வழங்கக்கூடிய ஆசிரியர்
- கணினி போதனாசிரியர்
- ஆடல், பாடல், விளையாட்டு தொடர்பாக கற்றுக்கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள்
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை (VTA) நிலையத்தில் Diploma முடித்த ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தகுந்த சம்பளத்துடன் EPF, ETF வழங்கப்படும்.

தமிழ், ஆங்கில, கணித, சிங்கள ஆசிரியர்கள் முன்பள்ளி Diploma கற்கை நெறியுடன் பணியாற்ற முடியும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி : 24.11.2021
புதன்கிழமை பி.ப 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

- மல்லாகம், தெல்லிப்பளை, இணுவில், வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றன.
- நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்கும்போது சுயவிபரக்கோவையும் கல்வித் தகைமைச் சான்றிதழ்களும் கொண்டுவருதல் வேண்டும்.
- எமது முன்பள்ளியின் செயற்பாடுகளை பார்வையிட Imm preschool எனும் facebook முகவரியை நாடுங்கள். (8731)

நேர்முகத் தேர்வுக்குரிய இடம்

Little Masters' Montessori & Day Care Centre .
808, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :- 077 747 4741
(துட்டாதெரு சந்தி ரயர் கடைக்கு அருகில் உள்ள ஒழுங்கையில்)

## வேலை ஆட்கள் தேவை

யாழில் இயங்கும் எலக்ரிக்கல் (Electrical) கடைக்கு அனுபவம்வாய்ந்த வேலை ஆட்கள் தேவை. (C-3075)

076 192 3444, 077 482 1912

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல உணவக மொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- பார்சல் கட்டுபவர்
- உணவு பரிமாறுபவர்
- துப்புரவு செய்பவர்

} இருபாலாரும் (8737)

077 846 1024

## வீடு வாடகைக்கு விடப்படும்

சாவகச்சேரி சங்கத்தானையில் ஏ9 வீதிக்கு அருகாமையில் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். வாகனத் தரிப்பிடம் உட்பட சகல வசதிகளும் உள்ளன.

நிறுவனங்களுக்கு மிகவும் பொருத்தமான இட வசதி. (8732)

076 757 0564

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் இயங்கிவரும் சன் கலர்லாப் அன் பிறின்டிங் நிறுவனத்திற்கு டிசைனிங் மற்றும் பிறேம்கள் தயாரிப்பதற்கு வேலையாட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் அல்லது பழக ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-3072)

( பயிற்சி அளிக்கப்படும் )

077 727 5213

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், மயிலிட்டி,
B.C றோட் சாந்த சந்தி அருகாமையில்
மெயின் றோட்டுடன்
2 பரப்புக் காணி விற்பனைக்கு
உண்டு. (8747)

தொடர்பு:
076 755 8606
077 015 0353

## A/L வரலாறு

உங்கள் ஆசிரியர்
M.பத்மன் B.A (Hons), P.G.D.E, M.A (History).
ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
A/L-2022, A/L-2023 பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

கற்பிக்கப்படும் இடங்கள்: (C-3074)

D.M.I யாழ்ப்பாணம் | உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி | BITSMANS மானிப்பாய்

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2789)

0768226240 DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.